**தலைப்பு 237 – தேசிய திட்டமிடல் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய திடடமிடல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2022 யூன் 17 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று

மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 2 நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டிற்கான கட்டுநிதி தேவைப்பாடாக ரூபா 235,135,000 தொகை மதிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில், திறைசேரியிடமிருந்து ரூபா 171,825,664 தொகை கோரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட கட்டுநிதியை விட குறைவாக இருந்த ரூபா 63,309,336 கட்டுநிதிக்கான கோரிக்கையை திறைசேரியிடம் முன்வைத்ததன் காரணமாக, மீளாய்வாண்டில் கட்டுநிதி மிகையாக மதிப்பிடப்பட்டிருந்தது, 2021 திசெம்பர் மாதத்திற்கான கட்டுநிதி தேவைப்பாடாக ரூபா 19,685,000 தொகை திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்தத் தேவைப்பாட்டை மீறி ரூபா 22,404,222 தொகையான கட்டுநிதி பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்தால் கட்டுநிதி மதிப்பீடுகளைத் தயாரித்தல் மற்றும் கட்டுநிதி கோருதலை முகாமை செய்தல் என்பன பலவீனமாகியிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. 2021.08.31 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் ஒதுக்கீட்டைச் செலவிடாமல் இந்தத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டைச் சேமிப்பதற்கு நடவடிக்கை எடுத்ததன் காரணமாக 2021 ஆம் ஆண்டிற்காக கட்டுநிதி திட்டத்தில் ஏற்பட்ட மாற்றம் தயாரிக்கப்பட்டது. 2021 திசெம்பரில் நி.பி. 66 இன் பிரகாரம் நிதியேற்பாட்டின் மாற்றம் காரணமாகவும் PALAMA செயற்திட்டத்தின் கீழ் வெளிநாட்டு உதவியாகப் பெறப்பட்ட மூலப்பொருள் உதவிகளை சுங்கத்திலிருந்து விடுவித்ததாலும் திசெம்பரில் திட்டமிடப்பட்ட கட்டுநிதி தொகை சேமிக்கப்பட்டிருந்தது. | வெற்றிகரமான நிதி முகாமைத்துவத்தை நிறுவுவதற்கு திணைக்களம் சரியான கட்டுநிதி மதிப்பீடுகளை தயாரிக்க வேண்டும். |

**2.2 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடு பயனற்றது**<br>03 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 3,100,000 கூட்டுமொத்தமான தேறிய நிதியேற்பாட்டில் முழு நிதியேற்பாடும், மீளாய்வாண்டில் எந்தப் பயன்பாடும் இல்லாமல் சேமிக்கப்பட்டது. | அவதானிப்புடன் இணங்கவில்லை. கொவிட்-19 தொற்றுநோய் நிலைமையின் தாக்கம் காரணமாக 2021.08.31 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நிதியேற்பாட்டை செலவிடாமல் சேமிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. | நி.பி. 50 இன் பிரகாரம் வருடாந்த செலவின மதிப்பீடுகள் சரியாகவும் யதார்த்தமாகவும் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | **மேலதிக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டமை**<br>மீளாய்வாண்டில் 19 செலவின விடயங்களிற்கு ரூபா 13,358,167,610 தொகையான மேலதிக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததால் நிதியேற்பாட்டை பயன்படுத்திய பின்னர் மீதி ரூபா 4,250,195,132 ஆக இருந்தது. ஒவ்வொரு செலவின விடயத்திற்கும் மேற்கொள்ளப்பட்ட தேறிய ஒதுக்கீட்டில் 27 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையான வீச்சில் மீதி இருந்தது. | அவதானிப்புடன் இணங்கவில்லை. 2021.08.31 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அந்த நிதியேற்பாடு முடக்கப்பட்டது. | நி.பி. 50 இன் பிரகாரம் வருடாந்த செலவின மதிப்பீடுகள் சரியாகவும் யதார்த்தமாகவும் தயாரிக்கப்பட வேண்டும். |

**2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 26 ஆம் திகதிய 2021/03 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டியின் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு இல. (iii) இன் கீழ் பொறுப்புக்கள் கூற்றில் அனைத்து கடப்பாடுகளும் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் ரூபா 354,082,475 கூட்டுமொத்தமான கடப்பாடுகள் திறைசேரி அச்சீட்டுத்தாள் SA – 92 இன் பிரகாரம் | 2022 ஆம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விலைப்பட்டியல்களின் கொடுப்பனவிற்காக இந்த திணைக்களத்தில் நிதியேற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் மாவட்ட செயலாளரின் செலவின விடயத்தின் கீழ் இந்த கொடுப்பனவுகளைச் செய்வதற்காக பொருத்தமான நிதியேற்பாடு | திறைசேரி புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட வேண்டும் என்பதால், திணைக்களம் திறைசேரி புத்தகங்களைத் திருத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஒதுக்கப்பட்டுள்ளது. 2021.12.31 இல் உள்ளவாறு சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலாளரின் செலவின விடயத்தின் கீழ் ரூபா 470,075,446 தொகை தீர்ப்பனவு செய்யப்படாத விலைப்பட்டியல்களாக பதிவு செய்யப்பட்டுள்ளது. | |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்பிக்கப்பட்ட குறிப்பு (iii) இன் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் பொது திறைசேரியால் ஒவ்வொரு செலவின விடயத்திற்கும் வழங்கப்பட்ட கடப்பாடுகள் பொறுப்புக்கள் கூற்றுடன் கணக்கிணக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டும். பொது திறைசேரியின் SA - 92 திரண்ட பொறுப்புக்கள் கூற்றில் ரூபா 776,593 கூட்டுமொத்தமான பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு (iii) இல் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிக்கப்பட்ட விடயத்துடன் இணங்கவில்லை. திணைக்களத்தின் கட்டுப்பாட்டை மீறி இடம்பெற்ற சம்பவம் இதுவாகும். 2021/2 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டல் மற்றும் 2021.10.26 ஆம் திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டுக்குரிய கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் CIGAS இணைய பயன்பாட்டில் பதிவேற்றம் செய்யப்பட்டிருந்த போதிலும் திறைசேரியின் SA-92 திரண்ட பொறுப்புக்கள் கூற்றில் இது குறிப்பிடப்படாதமை அரச கணக்குகள் திணைக்களத்திடம் வாய்மொழியாக வினவப்பட்டதுடன் தொழில்நுட்ப பிழை காரணமாக இந்த அறிக்கையில் அது குறிப்பிடப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது. | திணைக்கள புத்தகங்கள் திறைசேரி புத்தகங்களுடன் இணக்கம் செய்யப்பட வேண்டியதுடன் நி.பி. 427 இன் பிரகாரம் இது திருத்தப்பட வேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | | |
| (அ) | நி.பி. 104 (1) (அ) | திணைக்களத்தின் 02 வாகனங்களுக்கு ஏற்பட்ட விபத்துக்கள் தொடர்பான பூர்வாங்க அறிக்கைகளை நி.பி. 104 (3) இன் பிரகாரம் முறையே 28 நாட்கள் மற்றும் 4 மாதங்கள் தாமதமாக திணைக்களம் சமர்ப்பித்துள்ளது. | 2021 ஆம் ஆண்டில் இத் திணைக்களத்திற்குச் சொந்தமான 02 வாகனங்களுக்கு விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன, மேலும் கொவிட் 19 தொற்றுநோய் நாட்டில் நிலவியமை மற்றும் பொது நிர்வாக | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | சுற்றறிக்கையின் பிரகாரம் குறைந்த எண்ணிக்கையிலான உத்தியோகத்தர்களைக் கொண்டு கடமைகளை நிறைவேற்றியதன் காரணமாக நி.பி. இன் கீழ் அந்த விபத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்புக்களின் அறிக்கைகளை சரியான நேரத்தில் சமர்ப்பிக்க முடியவில்லை. பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் குறைந்த எண்ணிக்கையிலான உத்தியோகத்தர்களை அழைத்ததன் காரணமாக சில உத்தியோகத்தர்கள் நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். | |
| (ஆ) | நி.பி. 104 (4) ஆம் பந்தி | மேற்கூறிய வாகன விபத்துக்கள் தொடர்பான இறுதி அறிக்கைகள் நி.பி. 104 (4) இன் பிரகாரம் 03 மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும், திணைக்களம் ஒரு வாகனத்திற்காக கிட்டத்தட்ட 04 மாதங்கள் தாமதமாக அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. 2022 மே 18 அளவில் 14 மாதங்கள் கடந்துவிட்ட போதிலும், மற்ற வாகனத்திற்கான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | நி.பி. 880 | பிணை வழங்க வேண்டிய உத்தியோகத்தர்களால் பிணைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பிணை வழங்குவதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | நி.பி. 1645 (அ) | வாகன சம்பவக்குறிப்பு புத்தகங்கள் நாளதுவரையாக்கப்பட்ட முறையில் பேணப்பட்டிருக்கவில்லை. | பருவகால சேவைகள், திருத்தங்கள், டயர்கள், பட்டரிகள் பற்றிய சம்பவக்குறிப்பு புத்தகங்கள் | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நாளதுவரையாக்கப்பட்டுள்ளன. சில ஏனைய விபரங்கள் நாளதுவரையாக்கப்பட்டிருக்காததுடன் அந்த விபரங்களைச் சேர்ப்பதன் மூலம் சம்பவக்குறிப்பு புத்தகங்களை நாளதுவரையாக்குவதற்காக குறித்துக் கொள்ளப்பட்டன. | |
| (உ) | நி.பி. 1646 | வாகனங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் தொடர்ந்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் மாதமொன்றின் பின்னர் நாளாந்த ஓட்ட அட்டவணையுடன் மாதாந்த பொழிப்பின் அசலையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவர் அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. | குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுடன் இணங்கப்படுகிறதுடன் எதிர்காலத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு நாளாந்த ஓட்ட அட்டவணையை சமர்ப்பிப்பதற்காகக் குறித்துக்கொண்டேன். | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | நி.பி. 1647 (உ) | ஒவ்வொரு அரசாங்க நிறுவனங்களிலும் வாகனங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள், அவர் பொறுப்பில் இருந்த மோட்டார் வாகனங்களின் விபரங்கள் உள்ளடங்கிய பதிவேட்டை பேணியிருக்க வேண்டிய போதிலும் அத்தகைய பதிவேடு நாளதுவரையாக்கப்பட்ட முறையில் பேணப்பட்டிருக்கவில்லை. | வாகனப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்காததுடன் எதிர்காலத்தில் அத்தகைய பதிவேட்டைப் பேணுவதற்காக குறித்துக் கொள்ளப்பட்டது. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | திணைக்களத்தின் வாகனங்களுக்கான எரிபொருள் நுகர்வு பரிசோதனை மீளாய்வாண்டில் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | பெரிய திருத்தங்களிற்கு பின்னர் எரிபொருள் நுகர்வு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இரண்டு வாகனங்களுக்கான கடைசி எரிபொருள் நுகர்வு பரிசோதனை முறையே 2019.09.04 மற்றும் 2021.06.09 இல் மேற்கொள்ளப்பட்டன. அதன் பிரகாரம் 25000 கிலோமீற்றர் தூரம் | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஓடிய பின்னரோ அல்லது 12 மாத காலத்திற்குப் பின்னரோ, எது முதலில் வருமோ அப்போது அத்தகைய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை, மேலும் இந்த வருடத்தில் குழாம் வாகனங்களுக்கு அந்த பரிசோதனையை மேற்கொள்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | |
| (ஏ) | 2021 நவம்பர் 26 ஆம் திகதிய 2021/03 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டலின் 7.9 ஆம் பந்தி | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் புத்தகத்தின் மீதி ரூபா 1,402,031 ஆக இருந்தது. அந்த மீதி அதே நாளில் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டது. 2021 நவம்பர் 26 ஆம் திகதிய 2021/03 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டலின் 7.9 ஆம் பந்திக்கு முரணாக அம் மீதியானது நிதி நிலைமை கூற்றில் திறைசேரியால் தீர்க்கப்படாத மீதியொன்றாக குறிப்பிடப்பட்டுள்ளது. | இது தவறுதலாக முன்னைய ஆண்டைப் போலவே 2021 ஆம் ஆண்டில் காசு மற்றும் காசிற்கு சமமான மீதியில் சேர்க்கப்பட்டுள்ளது. சரியான நிதி நிலைமை கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டு சீர்செய்யப்பட்டுள்ளது. | தொடர்புடைய சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஐ) | நி.பி. 757 | வருடாந்த பொருள் மெய்மையாய்வின் படிவம், வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கையுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேவுகை கடிதம், மெய்மையாய்வு அறிக்கை மற்றும் பீ.ஜீ.பி.66 படிவம் ஆகியவற்றின் பிரதிகள் சமர்ப்பிக்கப்படும். | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.5 வங்கி கணக்குகளின் செயற்பாடு

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் வங்கி நடைமுறைக் கணக்கு தொடர்பாக 2021 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்ட வங்கி கணக்கிணக்க கூற்றின் பிரகாரம் வழங்கப்பட்ட போதிலும் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்காததும் செல்லுபடியாகும் காலப்பகுதி முடியவடைந்ததுமான ரூபா 3,696 கூட்டுமொத்தமான 02 காசோலைகள் தொடர்பாக நி.பி. 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை, | அவதானிப்புடன் இணங்கப்பட்டது. | வழங்கப்பட்ட போதிலும் வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காத காசோலைகள் தொடர்பான நடவடிக்கை நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் எடுக்கப்பட வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நி.பி. 34(1) இன் பிரகாரம் புதிய செயற்திட்ட முன்மொழிவுகள் மூலதனச் செலவின வரவுசெலவுத் திட்டத்தில் சேர்ப்பதற்காக அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட முதலீட்டு முன்னுரிமைகளின் அடிப்படையில் வளங்களின் கிடைப்பனவின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.<br>பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தில் சேர்க்கப்பட்ட செயற்திட்டங்கள் மாத்திரமே நிதியளிப்பதற்காக ஏற்றுக்கொள்ளப்படும். அதன் பிரகாரம் நடுத்தர கால பொது முதலீட்டு கட்டமைப்பை தயாரித்து நாளதுவரையாக்குதல் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் முக்கிய பணியாகும். அதன் பிரகாரம் 2021-2024 காலப்பகுதிக்கான பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நிறைவடைந்த பின்னர் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்களை அச்சிடுவதற்காக 2021 திசெம்பரில் ரூபா 1,927,072 தொகை செலவிடப்பட்டிருந்தது. | 2017-2020 மற்றும் 2021-2024 காலப்பகுதிக்கான பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் தற்போது அச்சிடப்பட்டுள்ளன.<br><br>பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கான பொது முதலீடுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு நடைமுறை ஆண்டு அதன் அடிப்படை ஆண்டாகக் கருதப்படுகிறது. அதன் பிரகாரம் 2021-2024 காலப்பகுதிக்கான பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படை ஆண்டாக 2021 உள்ளது. | அடிப்படை ஆண்டிற்குரிய முதலீட்டுத் திட்டத்தின் பிரகாரம் பாதீடு தயாரிக்கப்பட வேண்டும் என்பதால் பாதீட்டின் அங்கீகாரத்திற்கு முன்னர் முதலீட்டுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க வேண்டும். |

**3.2 சொத்து முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ() | திணைக்களத்திற்குச் சொந்தமான இரண்டு வாகனங்கள் 2021 ஆம் ஆண்டில் தற்காலிக அடிப்படையில் ஏனைய திணைக்களங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த வாகனங்களை முறையாக ஒப்படைக்கவோ அல்லது மீளப்பெறவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022.01.27 இல் WP CBH – 7437 ஆம் இலக்கத்தை கொண்ட வாகனம் இந்தத் திணைக்களத்திற்குத் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.<br><br>WP KP – 9601 ஆம் இலக்கத்தை கொண்ட வாகனம் ஏற்கனவே செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களத்திடம் தற்காலிகமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை விடுவிப்பதில் முறையாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்திற்கு சொந்தமான வாகனம் ஒன்று தற்காலிக அடிப்படையில் செயற்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு திணைக்களத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. 2021 மார்ச் 30 இல் அந்தத் திணைக்களத்தின் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அந்த வாகனத்திற்கு விபத்து ஏற்பட்டது. வாகன விபத்துக்கு காரணமான மூன்றாம் தரப்பு காப்புறுதிக் கம்பனியால் இது திருத்தம் செய்யப்பட்டது. திருத்தம் முறையாக செய்யப்பட்டதென தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் சான்றுறுதிப்படுத்தியிருக்கவில்லை. | திணைக்களத்திற்குச் சொந்தமான WP CBH – 7445 ஆம் இலக்க மற்றும் WP CBH – 7448 ஆம் இலக்க வாகனங்களுக்கு விபத்துக்கள் ஏற்பட்ட போது, சம்பந்தப்பட்ட காப்புறுதி கம்பனியின் பிரதிநிதி விபத்து நடந்த இடத்திற்கு வந்து முதற்கட்ட பரிசோதனையை மேற்கொண்டதுடன் அந்த வாகனங்களின் சேவை நிறுவனமான ரொயாட்டோ லங்கா (பிறைவேட்) லிமிட்டட் வாகனங்களை பழுதுபார்த்திருந்ததுடன், காப்புறுதி கம்பனியின் தொழில்முறை பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுனர்களால் பழுதுபார்த்தல்கள் பரீட்சிக்கப்பட்டன. | பழுதுபார்த்தல்கள் முறையாக சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனம் 2021 யூன் 12 இல் விபத்துக்குள்ளானது. தனியார் கம்பனி அதன் பழுதுபார்ப்பிற்காக ரூபா 135,069 தொகையான மதிப்பீட்டை திணைக்களத்திடம் சமர்ப்பித்துள்ளது. காப்புறுதி கம்பனியின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு திருத்தங்களை மேற்கொள்ளுமாறு திணைக்களம் அறிவித்திருந்தது. அதன் பிரகாரம் ரூபா 68,860 தொகைக்கு பழுதுபாாத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. பழுதுபார்த்தல் முறையாக மேற்கொள்ளப்பட்டிருந்ததென தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் சான்றுறுதிப்படுத்தியிருக்கவில்லை. | -மேற்படி- | பழுதுபார்த்தல்கள் முறையாக சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டும். |

**.3 முகாமைத்துவ பலவீனங்கள்**

---------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ() | 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான திணைக்களத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தை உள்ளடக்கியதாக திணைக்களத்தின் இணையத்தளம் நாளதுவரையாக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் மாத்திரமே கணக்காய்வு திகதியான 2022 மே 12 வரையிலும் இணையதளத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தை உள்ளடக்கி, திணைக்களத்தின் இணையதளத்தை நாளதுவரையாக்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | திணைக்களத்தின் இணையதளம் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் துப்புரவாக்கல் நடவடிக்கைகளுக்காக ஒப்பந்த நிறுவனமொன்றுக்கு ரூபா 242,354 தொகை செலுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக திணைக்களம் ஒப்பந்ததாரருடன் உடன்படிக்கையொன்றை கைச்சாத்திட்டிருந்தது.<br><br>இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| | (i) ஒப்பந்த உடன்படிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் ஒப்பந்ததாரர் துப்புரவாக்கல் பற்றிய அறிக்கையை வழங்கியிருக்க வேண்டிய போதிலும் அத்தகைய அறிக்கை பெறப்பட்டிருந்ததென நிரூபிக்கும் தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மாதாந்த துப்புரவாக்கல் அறிக்கை அந்த நிறுவனத்தால் வழங்கப்பட்டிருக்கவில்லை, அதைப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் வருகைப் பதிவேட்டில் ஊழியர்களின் தினசரி வருகை மற்றும் புறப்பாடு பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். | துப்புரவுத் தொழிலாளர்களின் வருகை மற்றும் புறப்பாடு தொடர்பான பதிவேடு, நிர்வாகப் பிரிவில் பேணப்பட்டு வருகிறது, அதை சம்பந்தப்பட்ட | ஆவணங்கள் முறையாக நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட வேண்டும். |

| | |
|---|---|
| உரிய கொடுப்பனவுகளைச் செய்வதில் வருகை மற்றும் புறப்பாடு பதிவேடு ஒரு பொறுப்பான உத்தியோகத்தரால் சரிபார்த்துச் சான்றளிக்கப்பட்டிருந்தது என்பதை உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்விற்கு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர் சரிபார்த்து, சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியலில் திருத்தம் செய்யப்பட்டு அதற்கேற்ப கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. |

## 4. நிலைபேறான அபிவிருத்தி இலக்ககளை அடைந்துகொள்ளுதல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் 2030 நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்காண்பதற்கும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்தகொள்வதை அளவிடுவதற்கு தேவையான அளவுகோல்களை இனங்காண்பதற்கும் அது தொடர்பான சரியான தரவு முறைமையை நிறுவுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பான அனைத்து நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் (17), இலக்குகள் மற்றும் கொள்கை தீர்மானங்கள் என்பன செயற்திட்டங்களின் மதிப்பீட்டின் போது இந்தத் திணைக்களத்தால் கருத்தில் கொள்ளப்படுகின்றன.<br><br>மேலும், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் ஏற்கனவே உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்டு, எமது அபிவிருத்திச் செயன்முறையில் இணைக்கப்பட்டு வருகின்றன. எனவே, இத்திணைக்களம் தொடர்பில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தனித்தனியாக இனங்காணப்படுவதில்லை. | திணைக்களத்தின் வகிபங்கை நிறைவேற்றுவதன் மூலம் அடைந்துகொள்ளக்கூடிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்காணுதல் மற்றும் அவற்றை அடைந்துகொள்வதற்கு தேவையான அளவுகோல்களை இனங்காணுதல். |

## 5. மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ() | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 118 ஆக இருந்தது, அவற்றில் 32 பதவிகள் வெற்றிடமாகவே உள்ளன. வெற்றிடமாக உள்ள பதவிகளில் 16 சிரேஷ்ட நிலை பதவிகள், 1 மூன்றாம் நிலை பதவி, 9 | வெற்றிடங்களை நிதி அமைச்சுக்கு அறிவித்தல் மற்றும் வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்காக சம்பந்தப்பட்ட சந்தர்ப்பங்களில் திணைக்களத்திடம் இருந்து பெறப்பட்ட கோரிக்கைகளுக்கு நிதி அமைச்சுக்கு | திணைக்களத்தின் வகிபங்கை நிறைவேற்றுவதற்கு அத்தியாவசியமான பதவிநிலைகளுக்கு பதவியணியினர் நியமிக்கப்பட வேண்டியதுடன் |

| | | | |
|---|---|---|---|
| | இரண்டாம் நிலை பதவிகள் மற்றும் 6 ஆரம்ப நிலை பதவிகள் உள்ளன. | இடமாற்றங்களுக்கான அனுமதிகளை வழங்குதல். அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் இடவசதி இல்லாததால் இடவசதி செய்து தருமாறு நிதி அமைச்சிடம் தொடர்ந்து கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் இடவசதிகள் கிடைத்திருக்கவில்லை. | அத்தியாவசியமற்ற பதவியணியினர் இருந்தால், அங்கீகரிக்கப்பட்ட பதவியணி திருத்தப்பட வேண்டும். |
| (ஆ) | ஒரு பதவிக்கு முழுநேர உத்தியோகத்தரின் சேவை தேவைப்பட்டால், தாபனவிதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவின் பிரகாரம் வழக்கமான அடிப்படையில் அத்தகைய உத்தியொகத்தர் ஒருவரை நியமனம் செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இருந்தபோதிலும், திணைக்களத்தில் நூலகர் பதவி 09 வருடங்களுக்கு மேலாக வெற்றிடமாகவே இருந்தது. | இந்த வெற்றிடங்களை நிரப்புமாறு பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. | -மேற்படி- |